# தவிசாளரின் அறிக்கை



நாட்டின் சமூகப்பொருளாதாரக் கட்டமைப்பில் ஒன்றித்ததாக டுடீ ஃபினான்ஸ் அமைந்துள்ளது. இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் முன்னணி நிறுவனம் எனும் வகையில், எம்மீது காணப்படும் பொறுப்பை உணர்ந்து செயலாற்றுவதுடன், பல்வேறு சமூகங்களுக்கும் மத்தியில் தொழில்முனைவுகளை ஊக்குவிப்பதற்கும், நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கும், மற்றும் பொருளாதாரப் பங்களிப்பை ஆழப்படுத்துவதற்கும் எமது கணிசமான வளங்களைத் தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றோம்.

ஜி ஏ ஆர் டி பிரசன்ன – தவிசாளர்


## தவிசாளரின் அறிவித்தல் - டிஜிட்டல் பதிப்புகள்


| வாசிக்கக்கூடிய பதிப்பு | | | கேட்கக்கூடிய பதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| ஐெ நுபெடளைா | சிங்களத்தில் | தமிழில் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் |
| DOC **3** | DOC **4** | DOC **5** | PLAY **2** | PLAY **3** | PLAY **4** |


### அணுகக்கூடிய வடிவங்கள்

மிகவும் எளிதில் அணுகக்கூடிய மற்றும் ஈடுபாட்டைத் தூண்டும் அனுபவத்தைப் பெற, மும்மொழி PDF மற்றும் ஒலி வடிவங்கள் வாயிலாக இந்தக் கூற்றை அறிந்துகொள்ளுங்கள். அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறையையும் எளிதான அணுகலையும் ஊக்குவிக்கும் வகையில், பரந்த அளவிலான மக்களுக்கும் தகவல்கள் சென்றடைவதை உறுதிசெய்யும் விதமாகவே இந்த வளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

# தவிசாளரின் அறிக்கை




### ஸ்திரப்படுத்தலில் இருந்து வாய்ப்புகளை நோக்கி

இலங்கையின் பொருளாதார மீட்சியில் முக்கியமான திருப்பு முனையாக 2025/26 நிதியாண்டு அமைந்திருந்தது. முன்னேற்றம் கண்ட பெரும்பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் அரசியல் உறுதிப்பாட்டினூடாக, வியாபாரங்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் நம்பிக்கை படிப்படியாக மீள நிறுவப்பட்டிருந்தது. ஆண்டின் ஆரம்ப கட்டத்தில் நிலவிய ஆதரவான வட்டி வீத சூழ்நிலையினால், கடனுக்கான கேள்வியை மீண்டும் தோற்றுவித்திருந்ததுடன், பல துறைகளில் பரந்த பொருளாதார செயற்பாடுகளுக்கு ஆதரவாக அமைந்திருந்தது.

பல முக்கிய முன்னேற்றங்கள் இந்த பொருளாதார வேகத்தை மேலும் வலுப்படுத்தியிருந்தன. வாகன இறக்குமதித் தடை நீக்கம், போக்குவரத்து மற்றும் வாகனத் துறையில் நிலவிய தேவையை வெளிப்படுத்தியிருந்ததுடன், பலமடைந்த வணிகச் சூழல், நிலையான வெளிநாட்டுப் பணப்பாச்சல், மேம்பாட்டை வெளிப்படுத்திய சுற்றுலாத் துறை செயல்பாடுகள் மற்றும் மீளெழுச்சி பெற்றிருந்த முதலீட்டு நம்பிக்கை ஆகியன பொருளாதார வளர்ச்சியை நோக்கிய தொடர்ச்சியான உந்துதலுக்குப் பக்கபலமாக அமைந்தன. முக்கியமாக, வேலைவாய்ப்பு, தொழில்முனைவு மற்றும் பிராந்திய பொருளாதார முன்னேற்றத்தின் முக்கிய உந்துசக்தியாக விளங்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான நடுத்தரக் கைத்தொழில் துறையின் மீட்சி, மேலும் சாதகமானதொரு நிலையை எட்டியிருந்தது.

மூன்றாம் காலாண்டின் பிற்பகுதியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக, பொருளாதாரத்தின் சில பிரிவுகளில் தற்காலிக தடங்கல்களை தோற்றுவித்திருந்த போதிலும், பரந்தளவில் பொருளாதாரப் போக்கு நேர்த்தியானதாக அமைந்திருந்தது. மொத்தத்தில், ஸ்திரப்படுத்தலில் இருந்து வாய்ப்புகளை நோக்கிய மாற்றத்தை ஆண்டு முழுவதிலும் அவதானிக்க முடிந்ததுடன், நிறுவன, முதலீட்டு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்கு உறுதியான அடித்தளத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

### அதிசிறந்த வினைத்திறன்

முன்னேற்றம் கண்டுவரும் இந்த பெரும்பொருளாதாரப் பின்னணிக்கு மத்தியில், எமது குழுமம் 2025/26 நிதியாண்டில் மிகச் சிறந்ததொரு செயல்திறனை வெளிப்படுத்தியிருந்தது. இதற்கமைய, ரூ. 62.90 பில்லியன் (2024/25: ரூ. 47.16 பில்லியன்) மொத்த வருமானத்தின் ஆதரவுடன், வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 20.45 பில்லியனையும் (2024/25: ரூ. 16.41 பில்லியன்), வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 14.04 பில்லியனையும் (2024/25: ரூ. 10.86 பில்லியன்) குழுமம் பதிவு செய்துள்ளது.

இந்த நிதியாண்டு சாதனை மிக்க பெறுபேறுகளைக் கொண்ட ஒரு ஆண்டாக அமைந்திருந்தது. நிறுவனம் தனது வரலாற்றில் மிக உயர்ந்த வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 19.88 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 22% வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. அதேவேளை, வரிக்கு பிந்திய இலாபமும் 27% இனால் அதிகரித்து ரூ. 13.67 பில்லியனை எட்டியுள்ளது. மேலும், மொத்த வருமானம் 28% வளர்ச்சியைப் பிரதிபலித்து ரூ. 60.03 பில்லியனாக உயர்வடைந்துள்ளது. இந்த முடிவுகள், இவ்வருடத்தில் நிறுவனத்தின் வலுவான வணிக வேகம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட செயல்பாட்டுத் திறனை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன.

நிறுவனத்தின் மூலதனப் போதுமை மற்றும் திரவத்தன்மைத் தற்காப்பு வளங்கள் ஆகியன ஆரோக்கியமான மட்டங்களில் காணப்பட்டதுடன், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கடன் ஒப்புதல் நடைமுறைகள், விவேகமான கடன் அபாய நிர்வகிப்பு மற்றும் கடுமையான கடன்வளப் தொகுப்பு கண்காணிப்பு ஆகியவற்றின் ஊடாகச் சொத்துகளின் தரம் தொடர்ந்து பலமடைந்தது. இது இத்துறையில் மிகக் குறைந்த மட்டத்திலான தொழிற்படாக்கடன் விகிதத்தை பேணுவதற்கு நிறுவனத்திற்கு வழிவகுத்தது. அத்துடன், துல்லியமாக மதிப்பிடப்பட்ட சொத்து-பொறுப்பு முகாமைத்துவ மூலோபாயங்கள் மூலம் நிறுவனம் தனது வருவாய் எல்லைகளை உகந்ததாக மாற்றியமைத்ததுடன், எமது மீண்டெழும் திறன் அல்லது நீண்டகால ஸ்திரத்தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இச்சிறந்த செயல்திறன் எட்டப்படுவதையும் உறுதி செய்தது.

# தவிசாளரின் அறிக்கை

**ஆண்டில், போக்குவரத்து தீர்வுகளுக்கான நிதிவசதியளிப்பு பிரிவில் எமது நிலையை நாம் மேலும் வலிமைப்படுத்தும் வகையில், அசோசியேட்டட் மோட்டர் ஃபினான்ஸ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு பங்கினை கையகப்படுத்தியிருந்தோம். அதனூடாக, முக்கியத்துவம் வாய்ந்த சந்தைப் பிரிவில் எமது பிரசன்னத்தை மூலோபாய ரீதியில் மேலும் வலிமைப்படுத்தியிருந்தோம்.**

இந்த வினைத்திறனினூடாக LBF வியாபார மாதிரியின் வலிமை, மாற்றமடைந்து வரும் சந்தை நிலைகளுக்கேற்ப உறுதியான பெறுபறுகளை தொடர்ச்சியாக வெளிப்படுத்தும் அதன் ஆற்றல் போன்றன பிரதிபலிக்கப்பட்டுள்ளன. அத்துடன், ஒரு முன்னணி நிதிச் சேவை நிறுவனத்திற்கு அவசியமான ஒழுங்குமுறை, விவேகம் மற்றும் மீண்டெழும் திறன் ஆகியவற்றைத் தொடர்ந்து பேணி வருகின்றது.

### வினைத்திறன் மற்றும் நம்பிக்கையின் பாரம்பரியம்

நிதியாண்டின் சாதனைகள், எமது நிறுவனத்தின் பரந்த மீண்டெழும் திறன், தொடர்ச்சித் தன்மை மற்றும் நிலையான நிறுவன வலிமை ஆகியவற்றின் வரலாற்றுப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். LBF நிறுவனம் பல வருடங்களாகத் தனது நிலையான செயல்திறன் மூலம் வலுவானதொரு வரலாற்றை உருவாக்கியுள்ளதுடன், சீரான வளர்ச்சி, ஆரோக்கியமான நிதி ஒழுங்குமுறை மற்றும் மாறிவரும் பொருளாதாரச் சுழற்சிகளுக்கு மத்தியிலும் பெறுமதியை உருவாக்குவதற்கான தனது ஆற்றலைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது.

இந்தச் சீரான தன்மை, எமது நிறுவனம் கட்டியெழுப்பப்பட்டுள்ள வலுவான அடிப்படைக் கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்டுள்ளது. இது எமது தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாகத் திகழும் விவேகமான ஆளுமை, செயல்பாட்டுச் சிறப்பு, வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் தெளிவான தொலைநோக்குக் பார்வை ஆகியவற்றை ஒன்றிணைத்து அமைந்துள்ளது.

சகல உறுதியற்ற காலப்பகுதியும், சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கும், அவற்றுக்குத் துரிதமாகப் பதிலளிப்பதற்கும் மற்றும் ஒரு தெளிவான இலக்குடன் முன்னோக்கி நகர்வதற்குமான எமது ஆற்றலை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இதுவே இன்றைய நாளில் நிறுவனத்தை வழிநடத்தும் நிறுவனசார் அறிவையும், மூலோபாய தொலைநோக்கையும் வடிவமைத்துள்ளது. இந்த வலுவான அடித்தளம், LBF நிறுவனம் எத்தகைய சூழலிலும் தளராது நிலைத்திருக்கவும், தனது வளர்ச்சி வேகத்தைப் பேணவும், தலைமுறைகள் கடந்தும் தனது தனித்துவத்தையும் சந்தை முன்னிலையையும் தக்கவைத்துக் கொள்ளவும் வழிவகுத்துள்ளது.

### தேசிய பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தல்

நாட்டின் சமூகப்பொருளாதாரக் கட்டமைப்பில் ஒன்றித்ததாக LBF அமைந்துள்ளது. இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் முன்னணி நிறுவனம் எனும் வகையில், எம்மீது காணப்படும் பொறுப்பை உணர்ந்து செயலாற்றுவதுடன், பல்வேறு சமூகங்களுக்கும் மத்தியில் தொழில்முனைவுகளை ஊக்குவிப்பதற்கும், நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கும், மற்றும் பொருளாதாரப் பங்களிப்பை ஆழப்படுத்துவதற்கும் எமது கணிசமான வளங்களைத் தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றோம்.

நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான நடுத்தரக் கைத்தொழில்கள் மீதான எமது தொடர்ச்சியான கவனம், நிலையான வளர்ச்சியை உள்ளடக்கியதாகவும், பரந்த அளவிலானதாகவும் இருக்க வேண்டும் என்ற எமது நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. தொழில்முனைவு, வேலைவாய்ப்பு மற்றும் பிராந்திய பொருளாதாரச் செயல்பாடுகளின் முக்கிய உந்துசக்திகளாக விளங்கும் இத்தகைய துறைகள், நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என நாம் நம்புகின்றோம். இந்த அர்ப்பணிப்புக்கு இணங்க, சன்மிதா எனும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் நாம் பெருமையடைகின்றோம். இத்திட்டம், எளிதில் அணுகக்கூடிய நிதித் தீர்வுகள் மூலம் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களையும், வளர்ந்து வரும் இளம் தொழில்முனைவோரையும் ஆதரிப்பதில் கவனம் செலுத்துகிறது. இதன் ஊடாக, பொருளாதாரத்தில் போதிய வசதிகளைப் பெறாத பிரிவினருக்கு புதிய நல்வாய்ப்புகளுக்கான வழிகளை ஏற்படுத்துகிறது.

இத்துறையின் மிகப்பெரிய கிளையமைப்பாக விளங்கும் 225 இற்கும் மேற்பட்ட கிளை வலையமைப்புகள் மற்றும் மிக வேகமாக விரிவடைந்து வரும் டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பு ஆகியவற்றின் துணையுடன், LBF நிறுவனம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களில் உள்ள தனிநபர்கள், தொழில்முனைவோர் மற்றும் வணிகங்களுக்கு நெருக்கமான முறையில் நிதிச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. இத்தகைய பரந்த சந்தை சென்றடைவு, நாடு முழுவதும் வாழ்வாதாரங்களை ஆதரிக்கவும், வர்த்தக முயற்சிகளை வலுப்படுத்தவும் மற்றும் பரந்த அளவிலான பொருளாதாரப் பங்களிப்பை ஊக்குவிக்கவும் எமக்கு வழிவகுக்கின்றது.

வங்கி சாரா நிதி நிறுவனங்கள் துறையில் மிகப்பெரிய வரி செலுத்துவோர் என்ற ரீதியிலும், 5,000 இற்கும் மேற்பட்ட தனிநபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஒரு நிறுவனம் என்ற வகையிலும், எமது பங்களிப்பு நிதிச் சேவைகளுக்கு அப்பாலும் விரிவடைந்துள்ளது. ஒட்டுமொத்த சமூகத்திலும் நல்வாய்ப்புகள், வேலைவாய்ப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றை விரிவுபடுத்த உதவுவதன் மூலம், இலங்கையின் அபிவிருத்திப் பயணத்துடன் நாம் என்றும் ஆழமாக இணைந்திருக்கின்றோம்.

### டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளை துரிதப்படுத்தல்

மதிப்பாய்வுக்குட்படுத்தப்பட்ட இந்த ஆண்டு, LBF நிறுவனத்தின் டிஜிட்டல் மாற்றியமைப்புப் பயணத்தில் மற்றுமொரு முக்கிய மைல்கல்லாகக் குறிக்கப்படுகின்றது. அதிகரித்து வரும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மற்றும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட நிதிச் சூழலினுள், எமது நிலையை நாம் தொடர்ந்து வலுப்படுத்தி வருவதை இது பிரதிபலிக்கிறது.

எமது டிஜிட்டல் மூலோபாயம், நிதிச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல், வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்துதல், செயல்பாட்டுத் திறனை வலுப்படுத்துதல் மற்றும் நாடு முழுவதும் உள்ள தனிநபர்கள் மற்றும் வணிகங்களின் வளர்ந்து வரும் நிதித் தேவைகளுக்குப் பக்கபலமாக அமையக்கூடிய அளவிடத்தக்க தளங்களை உருவாக்குதல் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. இந்த நிலைமாற்றத்தின் மையப்புள்ளியாக

# தவிசாளரின் அறிக்கை

திகழும் LB CIM கட்டமைப்பு, நிறுவனத்தின் நீண்டகால டிஜிட்டல் நிகழ்ச்சி நிரலின் முக்கிய தூணாகத் தனது நிலையைத் தொடர்ந்து பலப்படுத்தி வருவதுடன், இவ்வருடத்தில் 6 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பரிவர்த்தனைத் தொகையை கையாண்டுள்ளது.

நாடு முழுவதும் டிஜிட்டல் பின்பற்றல் வேகமாக முன்னெடுக்கப்படும் நிலையில், வாடிக்கையாளர் ஈடுபாட்டை ஆழமாக்கும், சேவை வழங்கலை மேம்படுத்தும் மற்றும் பரந்த அளவிலான நிதி உள்ளடக்கல் தன்மையை ஆதரிக்கும் வகையில், எதிர்காலத்திற்கு உகந்த டிஜிட்டல் திறன்களில் முதலீடு செய்வதற்கு நாம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் உள்ளோம். எதிர்காலத்தை நோக்குகையில், எமது டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பை ஒரு ஒருங்கிணைந்த தளமாக மேலும் மேம்படுத்துவது எமது இலக்காகும். இது நிதித் தீர்வுகள், வாழ்க்கை முறைச் சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவங்கள் ஆகியவற்றை ஒரே சீரான முறையில் ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பிற்குள் தடையின்றி இணைப்பதாக அமையும்.

### புதிய பகுதிகளுக்கு விரிவாக்கமடைதல்

நிறுவனத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியை நிர்ணயிக்கும் அடித்தளத்திற்கான முக்கியமான படிமுறைகளை LBF மேற்கொண்டிருந்தது. இலக்கு வைக்கப்பட்ட முதலீடுகள், மற்றும் எமது முதன்மைத் துறை சார்ந்த ஏனைய சார்பு மற்றும் வளர்ந்து வரும் புதிய சந்தைப் பிரிவுகளினுள் எமது சேவைகளை விரிவுபடுத்துவதன் ஊடாக, வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், புதிய பெறுமதி மூலங்களைக் கைப்பற்றுவதற்கும் உகந்த வகையில், மிகவும் பரந்த மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரானதொரு வணிகக் கட்டமைப்பை நாம் தொடர்ந்து கட்டியெழுப்பி வருகின்றோம்.

ஆண்டில், போக்குவரத்து தீர்வுகளுக்கான நிதிவசதியளிப்பு பிரிவில் எமது நிலையை நாம் மேலும் வலிமைப்படுத்தும் வகையில், AMF நிறுவனத்தின் கட்டுப்பாட்டு பங்கினை கையகப்படுத்தியிருந்தோம். அதனூடாக, முக்கியத்துவம் வாய்ந்த சந்தைப் பிரிவில் எமது பிரசன்னத்தை மூலோபாய ரீதியில் மேலும் வலிமைப்படுத்தியிருந்தோம்.

நாட்டின் பொருளாதார முன்னுரிமைகள் மற்றும் நீண்டகால சந்தை வாய்ப்புகளுக்கு அமைய எமது வணிகத்தை சீரமைக்கும் வகையில், சகாயவிலையில் வீட்டுவசதி, சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதியுதவி, மின்சார வாகனங்கள் மற்றும் வலு-வினைத்திறன் தீர்வுகளுக்கான நிதியுதவி வசதிகள் உள்ளிட்ட வளர்ந்து வரும் புதிய வணிகப் பிரிவுகளிலும் நாம் பிரவேசித்துள்ளோம். எமது பிராந்திய ரீதியிலான இலக்குகளைப் பிரதிபலிக்கும் வகையில், பிலிப்பைன்ஸ் நாட்டில் எமது வணிகச் செயல்பாடுகளை நிறுவுவதற்கான ஆரம்பக்கட்ட முதலீடுகளையும் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. எதிர்வரும் நிதியாண்டில் அங்கு தனது செயல்பாடுகளைத் தொடங்கவுள்ளதுடன், நுண்நிதி மற்றும் வாகன நிதியுதவி தீர்வுகளில் முதன்மையாகத் திகழ்வதில் கவனம் செலுத்தவுள்ளது.

### எதிர்காலத்திற்கு தயாரான நிறுவனமொன்றை கட்டியெழுப்புதல்

நிதி சார்ந்த செயல்திறன் மற்றும் சந்தை விரிவாக்கம் ஆகியவற்றிற்கு அப்பால், LBF நிறுவனம் முறையான கட்டுக்கோப்பு, விறுவிறுப்பு மற்றும் மீண்டெழும் திறன் ஆகியவற்றுடன் முன்னேறுவதற்கு வழிவகுக்கும் கட்டமைப்புகள், செயல்முறைகள் மற்றும் நிறுவன ரீதியிலான அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு நாம் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகின்றோம்.

பொறுப்புணர்வுமிக்க வழிநடத்தல் மீதான எமது அர்ப்பணிப்பு - நிறுவன ஆளுமை, இடர் முகாமைத்துவம், சைபர் பாதுகாப்பு, பரிவர்த்தனை கண்காணிப்பு மற்றும் தரவு ஆளுகை ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான மேம்பாடுகளில் பிரதிபலிக்கப்படுகிறது. இது நிறுவனத்தின் வளர்ச்சி, வலுவான மேற்பார்வை மற்றும் நிறுவனத்தின் நேர்மைத்தன்மை ஆகியவற்றின் துணையுடன் பேணப்படுவதை உறுதிசெய்கிறது.

மேம்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறல், மேம்பட்ட சுற்றுச்சூழல் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் நிலையான நிதியுதவி மீதான அதிகரித்து வரும் கவனம் ஆகியவற்றின் ஊடாக, எமது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை தொடர்பான நிகழ்ச்சி நிரலை நாம் தொடர்ந்து வலுப்படுத்தி வருவதால், எமது நீண்டகால மூலோபாயத்தின் ஒரு முக்கிய அங்கமாக நிலைபேறுதன்மை விளங்குகின்றது.

அத்துடன், திறமைசாலிகளை தக்க வைத்தல், தலைமைத்துவ விருத்தி மற்றும் தொடர்ச்சியான பயிலல், அர்ப்பணிப்பு, ஆற்றல் மற்றும் ஈடுபாடு போன்றவற்றை கௌரவித்தல் போன்றவற்றில் நாம் தொடர்ச்சியாக முதலீடு செய்து, எமது நிறுவனத்தின் நீண்ட கால முன்னேற்றகரமான செயற்பாட்டில் எமது ஊழியர்கள் முக்கியமான காரணிகளாக அமைந்திருப்பதை உறுதி செய்கிறோம்.

### அடுத்தகட்ட நகர்வு

நாம் எதிர்காலத்தை நோக்குகையில், LBF நிறுவனம் ஒரு வலுவான நிலையில் புதிய நிதியாண்டிற்குள் கால்பதிக்கின்றது. மேம்பட்டு வரும் பொருளாதாரத்தின் அடிப்படைக் காரணிகள், வலுவடைந்து வரும் வணிகச் செயல்பாடுகள் மற்றும் அதிகரித்து வரும் டிஜிட்டல் முறையிலான பின்பற்றல் ஆகியவை எமது விரிவாக்கத்திற்கு ஒரு சாதகமான தளத்தை வழங்குகின்றன. அதேவேளை, எமது வலுவான இருப்புநிலைக் குறிப்பு, நம்பகமான வர்த்தக நாமம் மற்றும் உறுதி செய்யப்பட்ட செயல்பாட்டுத் திறன்கள் ஆகியவை, புதிய நல்வாய்ப்புகளை முறையான கட்டுக்கோப்புடன் தொடர்வதற்கான தன்னம்பிக்கையை எமக்கு அளிக்கின்றன.

அதிகரித்து வரும் போட்டித்தன்மைமிக்க நிதிச் சூழலுக்குள் LBF நிறுவனம் பரிணமித்து வருகின்ற போதிலும், எமது தொலைநோக்குத் பார்வை தெளிவாகனதாக உள்ளது. இலங்கை முழுவதும் உள்ள தனிநபர்கள், தொழில்முனைவோர் மற்றும் வணிகங்களின் நிதித் தேவைகளுக்கு, நிதித்துறையில் முதன்மையாக உச்சரிக்கப்படும் நாமம் LBF என்பது மட்டும் தொடர்ந்து நீடிப்பதை உறுதிசெய்வதாகும்.

எமது இலட்சியம், வெறும் நிதி சார்ந்த வளர்ச்சியுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. எமது நிறுவனத்தின் பரவலாக்கம், தொழில்நுட்பம், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் ஊடாக தேசியப் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதையே நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இது நல்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், வணிக முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும், நிதி உள்ளடக்கல் தன்மையை மேம்படுத்துவதற்கும், அனைத்து பங்குதாரர்களுக்கும் நீடித்திருக்கக்கூடிய நீண்டகாலப் பெறுமதியை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும்.